# 07 வானத்து வெள்ளி

**(கையைத் தட்டி இசைத்துப் பாடுவோம்)**

அக்காவீட்டுக்குப் போனேன்
முத்துச் சிப்பி தந்தாள்
கொண்டு ஓடி வந்தேன்
வழி எல்லாம் பாம்பு.





பாம்படிக்கத் தடி எடுத்தேன்
தடியெல்லாம் தேன்
தேன் எடுக்கச் சட்டிக்குப் போனேன்
சட்டி எல்லாம் அழுக்கு.

அழுக்குக் கழுவ தண்ணீர்
அள்ளினேன்
தண்ணீரெல்லாம் மீனு
மீன் பிடிக்க வலைக்குப் போனேன்
வலை எல்லாம் கிழிசல்.





கிழிசல் தைக்க ஊசி எடுத்தேன்
ஊசி எல்லாம் வெள்ளி
வெள்ளியடி வெள்ளி வானத்து வெள்ளி
வெளுத்திருக்கும் அழகைப் பாரடி வள்ளி

**நாட்டார் பாடல்களைப் பாடி மகிழ்வோம்.**
**ජන ගී ගයා සතුටු වෙමු.**



## செயற்பாடு 01

பாடலைத் தனித்தனியாகவும் குழுக்களாகவும் கைகளைத் தட்டி இசைத்துப் பாடுவோம்.



## செயற்பாடு 02

பின்வரும் வாக்கியங்கள் சரியாயின் '✓' எனவும் பிழையாயின் '✗' எனவும் அடைப்புக் குறிக்குள் குறிப்போம்.
**පහත සඳහන් වාක්‍ය නිවැරදි නම් '✓' ලකුණ ද වැරදි නම් '✗' ලකුණ ද යොදන්න.**

1. அண்ணா வீட்டுக்குப் போனேன். (.....................)
2. பாம்பு கொண்டு வந்தேன். (.....................)
3. பாம்பு அடிக்கத் தடி எடுத்தேன். (.....................)
4. அழுக்குக் கழுவத் தேன் அள்ளினேன். (.....................)
5. மீன் பிடிக்க வலைக்குப் போனேன். (.....................)



### செயற்பாடு 03

**பொருத்தமான வினைச் சொல்லின் கீழ் கோடிடுவோம்.**
**සුදුසු ක්‍රියා පදය යටින් ඉරක් අඳිමු.**

**உதாரணம்:** நான் தண்ணீர் (எடுத்தேன் / அள்ளினேன்)

1. நான் அக்கா வீட்டுக்குப் (போனார்கள் / போனேன்)
2. முத்துச் சிப்பி (தந்தாள் / வந்தேன்)
3. பாம்பு அடிக்க தடி (வந்தேன் / எடுத்தேன்)
4. தேன் எடுக்கச் சட்டிக்குப் (தந்தாள் / போனேன்)
5. சிப்பியைக் கொண்டோடி (எடுத்தேன் / வந்தேன்)

**இறந்த கால அறிமுகம்**

1. நான் வீட்டுக்குப் போனேன்.
2. ஆசிரியர் பாடம் படிப்பித்தார்.
3. அம்மா சோறு சமைத்தாள்.
4. பூனை எலியைத் துரத்தியது.
5. நாய் குரைத்தது.



## செயற்பாடு 04

**தரப்பட்டுள்ள சொற்களைக் கொண்டு வாக்கியம் அமைப்போம்.**
**පහත දී ඇති වචන යොදා වාක්‍ය සාදමු.**

**(உதாரணம்) அக்கா: அக்கா பாட்டுப் பாடினாள்.**

1. தேன் : ...........................................................
2. சட்டி : ...........................................................
3. ஊசி : ...........................................................
4. வலை : ...........................................................
5. வெள்ளி : ...........................................................
6. தண்ணீர் : ...........................................................
7. நான் : ...........................................................
8. மீன் : ...........................................................
9. தடி : ...........................................................
10. பாம்பு : ...........................................................



## செயற்பாடு 05

**சேர்த்து எழுதுவோம். එකතු කොට ලියමු.**

**(உதாரணம்):** தடி எடுத்தேன் = தடியெடுத்தேன்

1. அக்கா + வீடு = ....................................
2. முத்து + சிப்பி = ....................................
3. வலை + எல்லாம் = ....................................

**பிரித்து எழுதுவோம். වෙන් කොට ලියමු.**

**(உதாரணம்):** சட்டியெல்லாம் = சட்டி எல்லாம்.

1. கொண்டோடி = ....................................
2. வழியெல்லாம் = ....................................
3. பாம்படிக்க = ....................................
4. அழகைப்பாரடி = ....................................



## செயற்பாடு 06

**கீழ்வரும் தமிழ்ச் சொற்களுக்குரிய சிங்களச் சொல்லின் கீழ் கோடிடுவோம்.**
**දී ඇති දෙමළ වචනයේ තේරුම සහිත වචන යටින් ඉරක් අඳින්න.**

1. வானம் (ඉර / හඳ / අහස)
2. வெள்ளி (ජලය / තරු / කබරයා)
3. பாம்பு (බල්ලා / නයා / කබරයා)
4. தேன் (පොල්පැණි / සීනි / මීපැණි)
5. சட்டி (පටිය / හට්ටිය / මුට්ටිය)
6. தண்ணீர் (ජලය / තෙල් / කිරි)
7. மீன் (නයා / ගෙම්බා / මාළු)
8. வலை (දැල / ඇළ / රැල්ල)
9. ஊசி (කම්බි / ඉදිකටුව / යකඩ)
10. சிப்பி (මුතු / කටු / සිප්පිකටු)